# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**எந்தெந்த பூங்காக்கள், பொழுதுபோக்குமிடங்கள் திறந்துள்ளன?**
ஜூன் 4 ன்படி, பெரும்பாலான மாகாண நிர்வாகத்தின் கீழுள்ள பொது கடற்கரைகள் **பகல் பயன்பாட்டுக்காக**மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

ஆளுநர் Jay Inslee (ஜே இன்ஸ்லீ)யின் பாதுகாப்புத் தொடக்க திட்டத்தின் 2 ம் நிலைக்கு நகர்ந்துள்ள பல மாவட்டங்களில் **முகாமிடுதல்** திறக்கப்படுகிறது.

மாகாண நிர்வாகத்திலுள்ள படகுகள் இயக்கம் மற்றும் 2 ம் நிலையிலுள்ள மாவட்டங்களின் மாகாண பூங்காக்களில் படகுத்துறைகளும் திறந்துள்ளன.

முகாமிடங்கள், பூங்காக்கள் மற்றும் பிற மாகாண நிர்வாக பொழுதுபோக்கு இடங்களின் தற்போதைய நிலையைத் தெரிந்துகொள்ள வருகை தாருங்கள்:

- Washington State Parks (வாஷிங்டன் மாகாண பூங்காக்கள்) — பூங்காக்களின் நிலை
- Washington Department of Fish and Wildlife (வாஷிங்டன் மீன் மற்றும் வன உயிரியல் துறை) — மூடல்கள் மற்றும் கட்டுப்பாடுகளின் பட்டியல்
- Washington State Department of Natural Resources (வாஷிங்டன் மாகாண இயற்கைவளத் துறை) — திறந்திருக்கும் பொழுதுபோக்கு இடங்கள்

**குறிப்பு:** மாவட்ட அதிகாரிகளின் வழிகாட்டுதலின் அடிப்படையில் நிலை 2 ல் உள்ள மாவட்டங்களில் சில பூங்காக்கள் முகாமிடலுக்காக உடனடியாகத் **திறக்கப்படாமல் இருக்கலாம்**. Washington State Parks (வாஷிங்டன் மாகாண பூங்காக்கள்) இந்த சமூகங்களுக்கு ஆதரவாயிருப்பதுடன் முகாமிடலை மீண்டும் திறப்பதற்கான சிறந்த அணுகுமுறையைக் கண்டறிய அவர்களுடன் தொடர்ந்து பணியாற்றுகிறது.

**எனக்கு Discover Pass (டிஸ்கவர் பாஸ்) தேவையா?**
ஆம். உங்கள் வாகனத்தை மாகாண பொழுதுபோக்குமிடத்திலும் Washington State Parks (வாஷிங்டன் மாகாண பூங்காக்கள்) மற்றும் Department of Natural Resources (DNR) (இயற்கைவளத்துறை) ஆகியவற்றால் நிர்வகிக்கப்படும் நீர் அணுகுமிடங்களில் நிறுத்தவும் Discover Pass (டிஸ்கவர் பாஸ்) தேவை. இந்த இடங்களில் மாகாண பூங்காக்கள், நீர் நிலைகள், பண்பாட்டுத் தலங்கள், வன உயிரியல் மற்றும் இயற்கைப் பகுதிகள், DNR முகாம் மைதானங்கள், இழுவண்டிகள், இழுவண்டி நிலையங்கள் மற்றும் DNR நிர்வகிக்கும் மேட்டு நிலங்கள் போன்றவை அடங்கும்.

மாகாண பூங்காக்களில் பகல் பயன்பாட்டு வருகைகளுக்கு மட்டுமே Discover Pass (டிஸ்கவர் பாஸ்) தேவை.

Washington Department of Fish and Wildlife (WDFW) (வாஷிங்டன் மீன் மற்றும் வன உயிரியல் துறை)யால் நிர்வகிக்கப்படும் இடங்களுக்கும் Discover Pass (டிஸ்கவர் பாஸ்) தேவை. உங்களிடம் ஏற்கெனவே தகுதிவாய்ந்த வேட்டை அல்லது மீன்பிடிப்பு உரிமம் வாங்கியபோது வழங்கப்பட்ட ஒரு Vehicle Access Pass (வாகன நுழைவுச்சீட்டு) இல்லாதபட்சத்தில் நீர் நிலைகள் மற்றும் வன உயிரியல் பகுதிகளும் இதில் அடங்கும்.

**மாகாண கடற்கரைகள் மூடப்பட்டிருக்கும் நேரத்தில் எனது Discover Pass (டிஸ்கவர் பாஸ்)க்கு என்னால் ஒரு நீட்டிப்பு பெறவோ அல்லது பணம் திரும்பப்பெறவோ முடியுமா?**

Discover Passes (டிஸ்கவர் பாஸ்கள்)க்கு பணத்திருப்பமோ அல்லது நீட்டிப்போ கிடையாது.

வருடாந்திர Discover Pass (டிஸ்கவர் பாஸ்) விலை $30. ஒரு நாளுக்கான நுழைவுச்சீட்டு $10. எனவே வருடாந்திர நுழைவுச்சீட்டுடன் ஒப்பிட மூன்று வருகைகளிலேயே முடிந்துவிடும்.

12 மாதங்களால் வகுத்தால் மாதச் செலவு $2.50 மட்டுமே. மாகாண கடற்கரைகள் மார்ச் 23 முதல் மே 5 வரை ஐந்து வாரங்களுக்கு மட்டுமே மூடப்பட்டிருந்தன.

கடந்த மிகப்பெரிய பொருளாதார மந்தநிலையில் இருந்ததுக்கும் மேலாக — இந்த வசந்தகாலத்தில், மாகாண பூங்காக்கள் கடுமையான வருவாய் இழப்புகளை சந்தித்துள்ளன.

எனினும், இந்தக் கோடையில் அடிக்கடி நீங்கள் வாஷிங்டன் மாகாண பூங்காக்கள் மற்றும் மாகாண கடற்கரைகளை அனுபவிக்கவும் மற்றும் உங்கள் நுழைவுச்சீட்டின் மூலம் சாத்தியமுள்ள பெரும் மதிப்பைப் பெறவும் உங்களை ஊக்குவிக்கிறோம்.

**விளையாட்டு மைதானங்கள் திறந்துள்ளனவா?**

COVID-19 பரவலைக் குறைக்க அடுத்த கட்ட அறிவிப்பு வரும்வரை மாகாண பூங்கா விளையாட்டு மைதானங்கள் மூடப்பட்டுள்ளன.

**ஓய்வறைகள் திறந்திருக்குமா?**

ஆம். திறந்துள்ள பூங்காக்களில் பகல் பயன்பாட்டுப் பகுதிகளிலும் மற்றும் முகாமிடங்கள் உள்ள பகுதிகளிலும் ஓய்வறைகள் திறந்திருக்கும். சில இடங்களில் மற்றும் மூடப்பட்டுள்ள முகாமிடங்களில் ஓய்வறைகள் மூடப்பட்டிருக்கலாம்.

தயாராக வாருங்கள். தயவுசெய்து உங்கள் சொந்த தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், குடிநீர், சோப், கை சுத்திகரிப்பான் மற்றும் கழிப்பறை காகிதம் போன்றவற்றை எடுத்து வரவும். கொண்டுவருபவற்றை செல்லும்போது தவறாமல் எடுத்துச் செல்லவும்.

பூங்கா அலுவலகங்கள், பார்வையாளர் மையங்கள் மற்றும் பூங்கா கட்டிடங்கள் இன்னும் பொதுமக்களுக்குத் திறக்கப்படவில்லை.

**கப்பல் தளங்கள், கப்பல் நிறுத்துமிடங்கள் மற்றும் கடல்சார் பூங்கா வசதிகள் திறந்துள்ளனவா?**
கப்பல்தள பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது. திறந்துள்ள பூங்காக்களில் கப்பல் நிறுத்துமிடம் உள்ளது. கப்பல்தளத்தைப் பயன்படுத்துவோர் அவர்கள் குடும்பத்தைச் சாராத பிறரிடமிருந்து உடல்ரீதியான இடைவெளியை கடைபிடிக்க வேண்டும்.

மாகாண கடல்சார் பூங்கா ஓய்வறைகள் வரம்புக்குட்பட்டு திறந்திருக்கும். தயவுசெய்து உங்கள் கழிவுகளை உங்களோடே எடுத்துச் செல்லவும். மேலும் தீவுகளில் குடிநீர் எதிர்பார்க்கவேண்டாம்.

**நங்கூரமிடுதலை கண்காணிக்கவோ அல்லது ஒழுங்குமுறைப்படுத்தவோ செய்யப்படுமா? இரப்பர் படகுகளுக்கான கடற்கரை தரையிறங்குமிடங்களின் நிலை என்ன?**
COVID-19 மூடுகைக்கு முன்பாக இருந்ததுபோலவே நங்கூரமிடல் கண்காணித்தலும் மற்றும் ஒழுங்குபடுத்தலும் உண்டு. சிறப்பு ஒழுங்குமுறைகள் ஏதுமில்லை.

**கழிவு நீர் வெளியேற்ற மையங்கள் திறந்துள்ளனவா, இயங்குகின்றனவா?**
மாகாண பூங்காக்களில் அமைந்துள்ள ஒருசில கழிவு நீர் வெளியேற்ற மையங்கள் திறந்துள்ளன.

வாஷிங்டனில் உள்ள பெரும்பாலான கழிவுநீர் வெளியேற்ற மையங்கள் அரசு அல்லது தனியார் துறைமுகங்களில் அமைந்துள்ளன. துறைமுகங்கள் திறந்துள்ளனவா மற்றும் கழிவுநீர் வெளியேற்ற மையங்கள் செயல்படுகின்றனவா என அறிய படகோட்டிகள் துறைமுகங்களைத் தொடர்புகொள்ளவேண்டும். வாஷிங்டன் கழிவு நீர் வெளியேற்ற மையங்கள் அமைந்துள்ள இடங்களை அறிய வருகை தாருங்கள்: parks.state.wa.us/657/Pumpout

**ஒரு பூங்கா பகல் பயன்பாட்டுக்கு மட்டும் திறந்திருக்குமாயின், எப்போது பூங்கா பூட்டப்படுகிறது?**
பகல் பயன்பாட்டு பூங்காக்கள் மாலையில் பூட்டப்படும்.

**எனது முகாமிடல் அல்லது இரவு தங்குவதற்கான முன்பதிவுக்கு முழுப் பணத்தையும் திரும்பப்பெற முடியுமா?**
அது சந்தர்ப்பத்தைப் பொறுத்தது...

- **மூடலினால் பாதிக்கப்பட்டுள்ள இரவு நேரப் பார்வையாளர்கள்:** மூடப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள முன்பதிவு செய்துள்ள இரவு நேரப் பார்வையாளர்களை முழு பணத்தையும் திருப்பித்தர நாங்கள் தொடர்புகொண்டு வருகிறோம்.
- **திறந்துள்ள முகாமிடல் பூங்காக்களுக்கு வரும் பார்வையாளர்கள்** இரவுத்தங்கலுக்கான முழுத்தொகையில் இரு திரும்பப்பெற முடியாத பரிவர்த்தனை கட்டணங்கள் போக ($8 முதல் $10 முன்பதிவு கட்டணம் மற்றும் $8 முதல் $10 இரத்து கட்டணம்) மீதியை திரும்பப் பெறலாம். இணையவழியில் முன்பதிவு செய்திருந்தால் கட்டணம் $8; தொலைபேசி வழியில் என்றால் $10.

உங்கள் தற்போதைய முகாமிடல் முன்பதிவு பற்றிய கேள்வியிருந்தால், தயவுசெய்து (888) CAMPOUT அல்லது (888) 226-7688 என்ற எண்ணில் அழைக்கவும்.

**நான் முன்பதிவுசெய்திருந்த முகாமிடுவதற்கான பூங்கா தற்போது மூடப்பட்டிருந்தால் என்ன செய்வது? எனது முன்பதிவு இரத்தாகியுள்ளதா என எனக்கு எப்போது தெரியும்?**
இந்த மாறும் சூழலில் உங்கள் பொறுமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் விடுமுறைத் திட்டங்கள் முக்கியமானவை என்று நாங்கள் அறிவோம். இந்தக் கோடையில் உங்களுக்குப் பிடித்த வாஷிங்டன் மாகாண பூங்காவில் உங்களால் முகாமிட முடியுமென நம்புகிறோம்.

அந்தக் காரணத்துக்காக, நீங்கள் முன்பதிவு செய்த தேதியிலிருந்து முகாமிடலுக்கு பூங்கா திறக்கப்படாது என்பதை கிட்டத்தட்ட உறுதிசெய்யும்வரை முன்பதிவுகளை இரத்து செய்ய நாங்கள் தயங்குகிறோம். எனவே, உங்கள் திட்டமிட்ட தங்குகைக்கு ஒருசில நாட்களுக்கு முன்பு வரையிலும் எங்களிடமிருந்து பதில் வராமல் இருக்கக்கூடும்.

முகாமிடலுக்கான ஒரு பூங்கா மூடியே இருந்து அதற்கான முன்பதிவை நாங்கள் இரத்துசெய்ய வேண்டியிருந்தால், உங்களை மின்னஞ்சலில் தொடர்புகொள்வோம். நீங்கள் முழுப் பணத்தையும் திரும்பப் பெறுவீர்கள்.

உங்கள் முன்பதிவு குறித்த குறிப்பிட்ட கேள்விகளுக்கு, எங்கள் முன்பதிவுக்குழுவை 888-CAMPOUT (888-226-7688) என்ற எண்ணில் தொடர்புகொள்ளவும்.

**கூட்டம் சேர்வதால் சிக்கல் எழுந்தால் மாகாண கடற்கரைகள் மூடப்படுமா?**
கடற்கரைகளை நாங்கள் மீண்டும் திறக்கையில், சமூக இடைவெளியை தொடர்ந்து கடைபிடிக்க மக்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். பெரிய குழுக்களாகக் கூடுவதையோ அல்லது மக்களிடையே சமூக இடைவெளியின்மையையோ நாங்கள் கவனித்தால், பூங்காக்களை அல்லது பூங்காக்களுக்குள் உள்ள பகுதிகளையோ நாங்கள் மூடக்கூடும்.

COVID-19 தொடர்பான புதிய பாதுகாப்பு அச்சுறுத்தல் எழுந்தால், பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்காக Washington Departments of Fish and Wildlife (WDFW) (வாஷிங்டன் மீன் மற்றும் வன உயிரியல் துறை) மற்றும் Natural Resources (DNR) (இயற்கை வளத் துறை) மற்றும் மாகாண பூங்காக்கள் குறுகியகால அறிவிப்புடன் பகுதிகளை மூடக்கூடும்.

**கூட்டம்சேருதல், குப்பை அல்லது வன உயிரியல் பகுதிகளில் அல்லது படகு புறப்படுமிடங்களில் ஏதேனும் பிற இடர்பாடுகள் இருப்பின் WDFWக்கு நான் எவ்வாறு தெரியப்படுத்துவது?**
Washington Department of Fish and Wildlife (வாஷிங்டன் மீன் மற்றும் வன உயிரியல் துறை)யின் இணையதளத்தில் மக்கள் பிரச்சினைகளை தெரிவிக்கலாம்.

**எனது உள்ளூர் மாகாண பூங்காவை சுத்தமாக வைத்திருக்கவும் பராமரிக்கவும் தன்னார்வலராக நான் உதவமுடியுமா?**
இந்த நேரத்தில் வேண்டாம். நமது தன்னார்வலர்களையும் அவர்களது கடின உழைப்பு நேரங்களையும் நாங்கள் பாராட்டுகிறோம். எனினும், அடுத்த அறிவிப்பு வரும்வரை எந்த தன்னார்வ நடவடிக்கைகளும் இடம்பெறாது. மாகாண பூங்காக்கள் முகாம் வழங்குதல் மற்றும் பிற தன்னார்வ நிகழ்ச்சிகளை இந்த கோடைக்குப் பிறகு மீண்டும் தொடங்க திட்டமிட்டு வருகின்றனர். புதுப்பித்தல்களைக் காண அல்லது Volunteer Program (தன்னார்வ நிகழ்ச்சி)யை மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது (360) 902-8583 என்ற எண்ணிலோ தொடர்புகொள்ளலாம்.

**சிற்றறைகளும் வட்டக்கூடாரங்களும் எப்போது திறக்கப்படும்?**
சிற்றறைகள், வட்டக்கூடாரங்கள் மற்றும் பழமையான தங்குமிடங்கள் ஆகியற்றுக்கு ஜூன் 30 வரையிலும் புதிய முன்பதிவுகள் ஏற்கப்படாது. ஜூனில் திறக்க வாய்ப்புள்ள சிற்றறைகளுக்கு ஏற்கெனவே செய்யப்பட்ட முன்பதிவுகள் ஏற்கப்படும்.

**குழு முகாம் மைதானங்கள் திறந்துள்ளனவா?**
அடுத்த அறிவிப்பு வரும்வரை குழு முகாம்கள் மூடப்பட்டிருக்கும்.

**விடுமுறை வீடுகள் திறந்துள்ளனவா?**
விடுமுறை வீடுகள் அடுத்த அறிவிப்பு வரும்வரை மூடப்பட்டிருக்கும்.